# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 56/2020 | **CNR No.** | **:** | TNKI13-000084-2020 |
| **Name** | **:** | ஆறுமுகம் | **Father's Name** | **:** | லேட்.மாணிக்கம் |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW2 |
| **Age** | **:** | 63 | **Village** | **:** | கே. பாப்பாரப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 12:20 PM | **End Time** | **:** | 12:35 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 21.10.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும், 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் காலி நிலம் கிரையம் செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். யார் யாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் கண்ணன் என்பவர் தனது பேரன் சம்பத்திற்கு கொடுத்துள்ளார். பிரமாணபத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தானா என்றால் ஆமாம். மேற்படி பிரமாணபத்திரத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்ல சொல்ல தயாரிக்கப்பட்டதா அல்லது தயார் செய்த பிரமாணபத்திரத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் நான் சொல்ல சொல்ல தயாரித்ததாகும். பிரமாணபத்திரத்தில் உள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல, நேரடியாக தெரியும்.

(2) வழக்கு சொத்து வாதியின் தாத்தாவிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் அவரது அனுபவத்தில் இருந்தது, எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. அவர் பெயரில் சொத்து இருந்தது என்று எதை பார்த்து நான் சொல்கிறேன் என்றால் கிரையத்தை பார்த்து சொல்கிறேன். யாரிடம் இருந்து எப்போது கிரையம் வாங்கினார் என்று நான் சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது.

(3) 2ம் பிரதிவாதி கணவர் எந்த காலத்தில் கவுன்சலராக இருந்தார் என்றால் 2000 ல் இருந்தார். நான் சொல்வது போல் அந்த காலத்தில் அவர் கவுன்சிலராக இல்லை என்றும் கவுன்சிலராக இருந்த சமயத்திலும் வழக்கு சொத்தை வாங்குவதற்கு நான் சொல்வது போல் எதுவும் செய்யவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் பாப்பாரபட்டியில் வசித்து வருகிறேன். நான் எத்தனை ஆண்டுகளாக அங்கு உள்ளேன் என்றால் எனது தாத்தா காலத்தில் இருந்து அங்கு தான் உள்ளோம்.

(4) வழக்கு சொத்து அரசங்கத்தால் வீடு இல்லாதவர்களுக்கு கொடுக்கப்பட்ட வீட்டு மனை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எத்தனை சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் சர்வே எண் 1, 5, 2 ஆகிய சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து விவசாய நிலமா என்றால் அது காலி ஜாகாவாகும் மற்றும் வீட்டு இடமும் உள்ளது. வழக்கு சொத்தில் எதுவும் இல்லையா என்றால் 5ல் தார்சு வீடு உள்ளது,

1ல் தேங்காய் மரம் உள்ளது மற்றும் 2ல் மாட்டு கொட்டாய் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் வழக்கு சொத்தில் பால் கடை உள்ளது என்றால் உள்ளது. வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றும் அதனால் தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(5) வாதியின் தாத்தா வாதிக்கு எதாவது பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் 2009ம் வருடம் மூன்று சர்வே எண்கள் கொண்டு பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். எனது பிரமணாபத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிவுற்றது.</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai